THE HINDU (TAMIL)
10 JUNE 2021
PAGE 3



புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தில்

# ‘எம்டெக் கம்ப்யூட்டேஷனல் பயாலஜி’ படிப்புக்கு ஒப்புதல்

புதுச்சேரி

புதுச்சேரி மத்திய பல்கலைக் கழகத்தில் ‘எம்டெக் கம்ப்யூட்டே ஷனல் பயாலஜி’ படிப்பை புதிதாக தொடங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதற்காக, மத்திய உயிரி தொழில்நுட்பவியல் துறையில் இருந்து ரூ. 5.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புதுவைப் பல்கலைக்கழ கத்தின் உயிர் தகவலியல், உயிர் அறிவியல் துறை சமர்ப்பித்த ‘எம். டெக் கம்ப்யூட்டேஷனல் பயாலஜி’ (2020-25) திட்டத்துக்கு மத்திய அரசின் உயிரி தொழில்நுட்பவியல் துறையில் இருந்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இதற்காக ரூ. 5.1 கோடி நிதியை புதுச்சேரி பல்கலைக்கழகம் சம்பந்தப்பட்ட துறைக்கு வழங்கும் முடிவுக்கும் மனிதவள மேம் பாட்டுத்துறை அனுமதி அளித் துள்ளது.

இதுதொடர்பாக இத்திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர், மையத் தலைவர் பேராசிரியர் ஏ. தினகரராவ் கூறியதாவது:

மத்திய அரசின் உயிரி தொழில் நுட்பவியல் துறையால் அனுமதிக் கப்பட்ட எம்.டெக் கம்ப்யூட்டே ஷனல் பயாலஜி திட்டத்தை இந்திய அளவில் வழங்கும் மூன்று பல்கலைக்கழகங்களில் புதுவை பல்கலைக்கழகமும் ஒன்றாகும். இங்கு 11 ஆசிரியர்கள் தனது சர்வதேச ஆராய்ச்சி அனுபவத்துடன் நிபுணத்துவம் பெற்றவர்கள். கணினி அறிவியல், உயிரிதொழில் நுட்பவியல், நுண் ணுயிரியல் மற்றும் மருந்தியல் ஆகியவற்றின் நிபுணத் துவத்துடன் இயைந்த இடைநிலை படிப்புகளை இம்மையம் வழங்குகிறது.

> **இப்படிப்பில் சேர உயிரி தொழில்நுட்பவியல் (GAT -B)தேசிய அளவிலான தேர்வில் தகுதி பெற வேண்டும்.**

எம்.டெக் கம்ப்யூட்டேஷனல் பயாலஜி முதுகலை பட்டபடிப் புக்கு அனுமதிக்கப்பட்ட அனைத்து மாணவ, மாணவிக ளுக்கும் மாதத்துக்கு ரூ. 12 ஆயிரம் உதவித்தொகை வழங்கப் படும்.

இப்படிப்பில் சேர உயிரி தொழில்நுட்பவியல் (GAT -B) தேசிய அளவிலான தேர்வில் தகுதி பெற வேண்டும். அங்கீகரிக் கப்பட்ட மொத்தமுள்ள 30 இடங்களுக்கான சேர்க்கை GAT-B மதிப்பெண்களின்அடிப்படையில் நடைபெறும். இடஒதுக்கீடு மத்திய அரசின் விதிமுறைகளின்படி இருக்கும் என்று தெரிவித்தார்.

DINAMANI

10 JUNE 2021

PAGE 3

# புதுவை பல்கலை. உயிரி தகவலியல் மையத்துக்கு மத்திய அரசு ரூ.5.16 கோடி நிதி

**புதுச்சேரி, ஜூன் 9:** புதுவை மத்திய பல்கலைக்கழக உயிரி தகவலியல் மையம் மூலம் நடத்தப்படும் எம்.டெக். கம்ப்யூட்டேஷனல் பயாலஜி படிப்புக்காக, மத்திய அரசின் உயிரி தொழில்நுட்பவியல் துறை சார்பில் ரூ.5.16 கோடி நிதி வழங்கப்பட்டது.

புதுவை மத்திய பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் குர்மீத்சிங் தலைமையிலான பல்கலைக்கழக உயிரி தகவலியல் மற்றும் உயிரி அறிவியல் துறை, முதுநிலை எம்.டெக். கம்ப்யூட்டேஷனல் பயாலஜி (2020 - 25) படிப்பை வழங்க மத்திய அரசிடம் அறிக்கை சமர்ப்பித்து, தற்போது ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இதற்காக, மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத் துறையானது உயிரி தொழில்நுட்பவியல் துறையின் மூலம் ரூ.5.168 கோடி நிதியை வழங்க அனுமதி வழங்கியுள்ளது.

இது தொடர்பாக பல்கலைக் கழக உயிரி தகவலியல் மையத் தலைவர் ஏ.தினகரராவ் கூறியதாவது:

மத்திய அரசின் உயிரி தொழில்நுட்பவியல் துறையால் அனுமதிக்கப்பட்ட எம்.டெக். கம்ப்யூட்டேஷனல் பயாலஜி படிப்பை தேசியளவில் வழங்கும் மூன்று பல்கலைக்கழகங்களில் புதுவை பல்கலைக்கழகமும் ஒன்றாகும்.

பல்கலைக்கழகத்தில் மொத்தமுள்ள 30 எம்.டெக். கம்ப்யூட்டேஷனல் பயாலஜி இடங்களுக்கான சேர்க்கை தேசியளவிலான உயிரி தொழில்நுட்பவியல் திறனறித் தேர்வில் (GAT B) தேர்ச்சி மற்றும் மதிப்பெண்களின் அடிப்படையில் நடைபெறும்.

மேலும், இதர இட ஒதுக்கீட்டு விதிமுறைகளும் கடைப்பிடிக்கப்படும். இதில், படிக்கும் மாணவர்களுக்கு மாதம் ரூ.12,000 உதவித்தொகை வழங்கப்படும் என்றார் அவர்.

DINAMALAR

10 JUNE 2021

# புதுச்சேரி பல்கலையில் புதிய படிப்புக்கு அனுமதி

**புதுச்சேரி, ஜூன் 10–** புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் எம்.டெக்., கம்ப்யூட்டேஷனல் பயாலஜி படிப்புக்கு, மனித வள மேம்பாட்டு அமைச்சகம் உயிரி தொழில்நுட்பவியல் துறை ரூ.5.16 கோடிக்கு நிதி அளித்து, அனுமதி தந்துள்ளது.

இந்த பாடத்திட்டத்தில் 30 மாணவர்கள் சேர்க்கப்பட உள்ளனர். சேரும் அனைத்து மாணவர்களுக்கும் மாதம் 12 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை கிடைக்கும்.

இப்படிப்பில் சேர தேசிய அளவிலான திறன் அறிவு தேர்வில் தகுதி பெற வேண்டும்.